சாட்சிய வாக்கு மூலம்

(அத்தியாயம் 25 பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா)

1989 ஆண்டு இயற்றப்பட்ட பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர்

( வன்கொடுமை தடுப்பு ) சட்டத்தின் கீழான

வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம் ,

திருவாரூர் - 610 001

தேதி: 26.02.2026

| | | |
|---|---|---|
| சிறப்பு அமர்வு வழக்கு எண். | : | **32/2025** |
| சாட்சியின் வரிசை எண். | : | அ.சா-6 |
| சாட்சியின் பெயர் | : | சிவகுமார் |
| தந்தை பெயர் | : | கோவிந்தராஜன் |
| கிராமம் | : | திப்பிராஜபுரம் |
| தாலுக்கா | : | கும்பகோணம் |
| தொழில் | : | உதவி திட்ட அலுவலர்,<br>மகளிர் பிரிவு, மாவட்ட<br>ஆட்சியர் அலுவலகம்,<br>திருவாரூர். |
| வயது | : | 53 |

2026 ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 26 ஆம் நாள் ஆகிய இன்று இந்த நீதிமன்றத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரியும் திரு.ஆர்.வீரபாண்டியன் அவர்களால் இந்த சாட்சிக்கு 1969-ம் ஆண்டு உறுதிமொழி சட்டத்தின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் சாட்சிய வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

எதிரி ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். தற்போது நான் திருவாரூர், மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், மகளிர் பிரிவில், உதவி திட்ட அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். அ.சா.1 சுந்தரராஜன் என்பவர் துப்புறவு பணியாளராக பணிபுரிந்து வருகிறார் என சான்று அளித்தேன். நான் வழங்கிய சான்று **அ.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

வலங்கைமான் போலீசார் என்னிடம் அ.சா.1 சுந்தரராஜன் என்பவர் என்ன வேலை பார்க்கிறார் என கேட்டதால், நான் அ.சா.ஆ.2 சான்று வழங்கினேன். என்னிடம் எழுத்துமூலமாக போலீசார் கேட்டார்களா என்றால் எழுத்து மூலமாகத்தான் கேட்டார்கள். அ.சா.ஆ.2 ஆன சான்றில் வலங்கைமான் காவல் ஆய்வாளர் கேட்டுக்கொண்டதற்கிணங்க நான் வழங்கிய விபரம் எனது சான்றில் குறிப்பிடப்படவில்லை என்றால், சரிதான். எந்த தேதியில் விண்ணப்பம் கொடுத்து சான்று கேட்டார்கள் என்றால் எனக்கு தெரியாது. துப்புறவு பணியாளர் வேலை என்பது ஒரு முழு நேர பணி என்றால் சரிதான். இவ்வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை விசாரிக்கவில்லை என்று சொன்னால் சரிதான்.

சாட்சி சொல்ல சொல்ல என் உத்தரவுப்படி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு பின் சாட்சியிடம் மேற்படி வாக்குமூலம் படித்துக் காண்பித்த போது சாட்சி சரியென்று என் முன்பாக கையொப்பம்செய்தார்.

VADIVEL M

Digitally signed by VADIVEL M
Date: 2026.02.26 18:09:56 +0530

அமர்வு நீதிபதி,
எஸ்.சி /எஸ்.டி (வன்கொடுமை தடுப்பு )
வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு
நீதிமன்றம், திருவாரூர்.